பக்கங்கள் 14 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ஞாயிறன்று திருமலையில் சம்பந்தனின் இறுதிக்கிரியை

### புதனன்று நாடாளுமன்றத்தில் அஞ்சலி நிகழ்வு

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் எம்.பியின் இறுதிக்கிரியைகள் அவரது சொந்த இடமான திருகோண 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 18 திங்கட்கிழமை 01.07.2024 அதிர்வு 336



# சம்பந்தனுடனான சந்திப்புக்களின் நினைவுகளை நான் போற்றுவேன்

## இலங்கைத் தமிழர்களுக்காக அவர் தொடர்ந்து பாடுபட்டு வந்தவர் என்று மோடி இரங்கல் செய்தி

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.**

சம்பந்தனின் மறைவு குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள இரங்கலில்,

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்.

சம்பந்தனுடனான சந்திப்புக்களின் இனிய நினைவுகளை நான் எப்போதும் போற்றுவேன்.

சம்பந்தன் இலங்கையில் உள்ள தமிழர்களின் அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், நீதி மற்றும் கண்ணியத்துக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வந்தவர்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# இறுதி மூச்சு வரை இலங்கைத் தமிழரின் நலனுக்காகவே செயற்பட்டார் சம்பந்தன்

## இரங்கல் செய்தியில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

(எம்.கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. இறுதி மூச்சு வரை தமிழ் மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார், செயற்பட்டார் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இரா. சம்பந்தன் மறைவுக்குத் தமிழக முதலமைச்சர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

“இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்கள 04▶






# இலங்கை அரசியல் சகோதரத்துவத்துக்கு சம்பந்தனின் மறைவு பேரிழப்பாகும்!

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தனின் மறைவு இலங்கை அரசியல் சகோதரத்துவத்துக்கு ஒரு இழப்பு என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சம்பந்தன் எனது பழைய நண்பர். நாங்கள் பல நாள்கள் பல்வேறு விடயங்களைகுறித்துகலந்துரையாடியுள்ளோம். அவரது மறைவு இலங்கை அரசியல் சகோதரத்துவத்துக்கு இழப்பாகும்.

இந்த நிலையில், அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆறுதலை கூற விரும்புகிறேன்.- என்றுள்ளது.

# பன்மைத்துவ அடிப்படையில் சேர்ந்து வாழ்வோம் என்று உலகறியச் சொன்னவர் சம்பந்தன் ஐயா!

## தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் இரங்கல்




நான் ஒரு இலங்கையன் என்று சிங்க கொடியை தூக்கி காட்டி, பன்மைத்துவ அடிப்படையில் சேர்ந்து வாழ்வோம் என்று உலகறிய சொன்னவர் இரா. சம்பந்தன் ஐயா.

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவின் இழப்புச் செய்தி அறிந்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தான் முதலில் ஒரு இலங்கையன். அப்புறம் தமிழன். ஆனால், சிங்கள பௌத்த இலங்கையன் அல்ல. சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற "பல்லின-பன்மொழி-பன்மத" இலங்கையன். பன்மைத்துவம் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழ்வோம் என்று உலகறிய சொன்னவர். அப்படித் தெரிவித்து, சிங்கக் கொடியையும் யாம். மேடையில் தூக்கிக் காட்டியவர். அதற்காக தமிழ் தேசிய வாதிகளால் கடுமையாக விமர்சிக்கப் பட்டவர்.

எல்லாவற்றையும் மீறி நல்லாட்சி காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவை நம்பி இரண்டு வருடத்துக்கு குறையாமல், வழிகாட்டல் குழுவில் அமர்ந்து, புது அரசியலமைப்பை எழுதி முடிக்கப் பாடுபட்டவர். அதை நம்பி "தீபாவளிக்கு தீர்வு", "பொங்கலுக்கு தீர்வு" என்று கெடு கூறி அதற்காகவும் கடுமையாக விமர்சிக்கப் பட்டவர்.

அறிவு, ஆன்மா, உடல் என்ற மனிதக் கூறுகளில், உடலால் மட்டுமே பலவீனமாக இறுதி காலத்தில் இருந்தார். அறிவும், ஆன்மாவும் பலம் இழக்கவே இல்லை. நான் அவரது கட்சி அங்கத்தவன் இல்லை. ஆனால், இந்த "சிங்கக் கொடி முதல் வழி காட்டல் குழு" சம்பவங்கள்வரை எல்லாவற்றையும் அவருக்கு மிக பக்கத்தில் இருந்து நேரடியாக பார்த்தவன் நான்.

அவரை மதித்து, அவரைப் பயன்படுத்தி, பிரிபடாத இலங்கைக்குள் தீர்வு தேடத் தவறிய அனைத்துச் சிங்கள பௌத்த தேசிய கட்சிகளின் தலைவர்களும் இப்போது வரிசையாக வந்து, "இரா சம்பந்தனுடன் எனக்கு முப்பது வருட பழக்கம், நாற்பது வருட பழக்கம், ஐம்பது வருட பழக்கம் என்று அளப்பார்கள். அதையும் உங்கள் சாகாத ஆன்மா எங்கோ இருந்த படி கேட்க போகிறது, சம்பந்தன் ஐயா." பிரிவோம்..! சந்திப்போம்..!.- என்றுள்ளது.





# யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 25 பேர் கைது

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச் சாட்டில் 25 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ள னர்.

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு நாட்டுப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் அனைவரும் காங்கேசன்துறை ஊடாக மயிலிட்டியில் வைத்து யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளனர்.

மேற்படி 25 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.





# கோணேஸ்வரர் ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாக்கக் கோரி இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கக் கோரி இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

திருக்கோணமலை நகர சபைக்கு அண்மையில் உள்ள திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபைக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்கள் மற்றும் சைவ அடியார்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்தனர்.

திருக்கோணேஸ்வரம் ஆலய அண்மித்த கடைத் தொகுதியில் கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகியதையடுத்து அதனை சீல் வைக்கச் சென்ற திருகோணமலை நகர சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைக் கண்டித்தும், திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க அரச துறை அதிகாரிகள் முன்வர வேண்டும் எனக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநருக்கு இது தொடர்பான மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டது.






## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இறுதி மூச்சு...

வர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் மரியாதையைப் பெற்ற அரும்பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் சம்பந்தன். இறுதிமூச்சு வரையிலும் தமிழ் மக்களின் நலனுக்காகவே அவர் சிந்தித்தார், செயற்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரைநூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வந்தன. இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் போராடி வந்தார்.

இந்தியாவோடும் தமிழ்நாட்டுடனும் மிகச் சிறந்த நட்புறவைச் சம்பந்தன் பேணி வந்தார். தலைவர் கலைஞரின் நண்பராகவும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் பல முறை அவரைச் சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

2015ஆம் ஆண்டில் சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, "எனது அருமை நண்பர் நாவலர் அமிர்தலிங்கத்துக்குப் பிறகு, தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகியுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத் தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவு காலம் ஏற்படாதா என்று நீண்ட நாட்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கையைத் தருகின்றது" என்று முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டு 13ஆவது முறையாகத் தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பந்தனும் "இதுவொரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். இலங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு உங்களுடைய ஆக்கப்பூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்" என்று வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

ஈழத்தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய சம்பந்தனின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தனை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத் தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்." - என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஞாயிறன்று...

மலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அரச நிகழ்வாக நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னர் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்குக் கொழும்பு - பொரளையில் ஏ.எவ்.றேமண்ட் மலர்ச் சாலையில் சம்பந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அங்கிருந்து அவரது பூதவுடல் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு வைத்து அஞ்சலியும் மரியாதையும் செலுத்தப்படவுள்ளது.

அதன்பின்னர் பிற்பகல் 4 மணிக்கு சம்பந்தனின் பூதவுடல் நாடாளுமன்றத்தில் இருந்து அவரது சொந்த இடமான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. அங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன.

இறுதிக் கிரியைகளை அரச நிகழ்வாக நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டாலும் சம்பந்தன் ஐயா குடும்பத்தின் மத காலாசார முறைப்படி அது முன்னெடுக்கப்படும் என்றும், அதன் காரணமாக வழமையாக அரச நிகழ்வாக முன்னெடுக்கப்படும் இறுதி நிகழ்வுகளில் இடம்பெறும் இராணுவ மரியாதை நிகழ்வுகள் இதில் இடம் பெறா எனவும் தெரிவிக்கப்பட்டது.



# கடமையின்போது தாக்கப்பட்ட அலுவலர்; திருமலை நகரசபை ஊழியர் போராட்டம்!

## தாக்கியவர்கள் கைது செய்யப்படும்வரை போராட்டம் தொடருமாம்!!





**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை நகரசபை அலுவலர் தமது கடமையை செய்ய முற்பட்ட போது தாக்கிக் காயப்படுத்தப்பட்டமையை ஆட்சேபித்தும், தாக்கியவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்தும் இன்று (01) காலை திருகோணமலை நகரசபை அலுவலர்கள் அனைவரும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நகரசபையின் அலுவலக நிர்வாக பிரிவு, சுகாதாரப் பிரிவு, வேலைப் பகுதி என்பவற்றைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது அலுவலரை தாக்கியவர்களை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தும்வரை தமது போராட்டம் தொடருமென அவர்கள் தெரிவித்தள்ளனர்.

திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.நஜீம் நகரசபை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை சந்தித்து, அலுவலரை தாக்கியவர்களை விரைவாக கைது செய்து சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதாகவும், தாக்குதல் நடைபெற்ற போது அங்கு கடமையிலிருந்த பொலிஸ் அலுவலர்கள் தமது கடமையை செய்யத்தவறி இருந்தால் அதற்கான நடவடிக்கை அவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் என்றும் போராட்டத்தைக் கைவிடுமாறும் கூறினார்.

எனினும் தமது அலுவலரை தாக்கியவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி கிடைக்கும்வரை போராட்டத்தை கைவிட முடியாது என்று போராட்டக்காரர்கள் கூறினர்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்மித்து, சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள, கடையொன்றினுள் மதுபான விற்பனை நடைபெற்ற கடையை மூடி, அதற்கு முத்திரை இடச் சென்ற போது நகர சபையின், வேலைப் பகுதி மேற்பார்வையாளர் ஏ.டிலக்சன் அங்கிருந்த சிலரால் தாக்கிக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

நகரசபை செயலாளர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அலுவலர்கள் சகிதம், நகர சபை செயலாளரின் உத்தரவுக்கு இணங்க கடையை மூடி முத்திரை இட அலுவலர் சென்ற போதே தாக்குதல் நடைபெற்றுள்ளது.

பொலிஸார் அந்த இடத்தில் இருந்த போதும் அவர்கள் தாக்குதலை தடுக்கவில்லை என்றும், தாக்கியவரை கைது செய்யவில்லை என்றும் நகரசபை அலுவலர்கள் கூறினர்.

திருகோணமலை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பார்த்தீபன், நகரசபை செயலாளர் ரி.ஜெயவிஸ்னு ஆகியோரும் நகரசபை வளாகத்தில் வைத்து ஊழியர்களுடன் கலந்துரையாடி, போராட்டத்தை கைவிடுமாறு கோரிய போதும் ஊழியர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரசியல் வெளவால்கள்

மரங்கள் பழுத்தால் வெளவால்கள் தேடி வரும். யாரும் அதற்கு வழிகாட்டவோ அல்லது சொல்லிக் கொடுக்கவோ தேவையில்லை.

அதுபோலவே அரசியல் வெளவால்களும் அதிகாரப் பழங்கள் எங்கு இருக்கின்றனவோ அங்குதான் - அவற்றைத் தேடித்தான் - நாடித்தான் - ஓடும்.

மொட்டுக் கட்சியில் இருக்கும் அரசியல் வெளவால்களுக்கும் தமது கட்சியில் அதிகாரப்பழம் உருவாகுவதற்கு பூ, பிஞ்சு கூட இல்லை என்ற யதார்த்தம் புரிவதால் அந்த மரத்தில் இனியும் தொங்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று கருதி, அதிகார பழங்கள் குலுங்கக் கூடிய மரங்களை நோக்கி பறக்க எத்தனிக்கின்றன.

தானும், ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் மற்றும் சில எம்.பிக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்திருக்கின்றனர் என்று நேற்று மாத்தறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வைத்து அமைச்சர காஞ்சன விஜயசேகர விடுத்த அறிவிப்பை இப்படித்தான் நோக்க வேண்டி இருக்கின்றது.

அமைச்சர்கள் ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க, அலி சப்ரி மற்றும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்தமகே ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்து விட்டனர் என்று கூறிய அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் கருத்தில் பின்புலமாகத் தொனித்து நிற்கும் அம்சம் இதுதான்.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெற்றிவாய்ப்பு உண்டு என்பதால் அவருக்குப் பின்னால் அணி திரண்ட கூட்டத்தை சேர்ந்தவர்கள் இவர்கள்.

இன்னும் நூறு நாள்களில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கப் போகின்றது.

அதில் வெற்றி வாய்ப்பு மூன்று பேருக்கு இடையில்தான் என்பதே தற்போது வரையான நிலைமை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க ஆகியோரே அம்மூவருமாவர்.

இந்த வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளர்களின் பட்டியலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தரப்பிலிருந்து யாரும் இல்லை. இனி ஒரு வேட்பாளரை அக்கட்சி களத்தில் நிறுத்த முன் வந்தாலும் அவருக்கான வெற்றி வாய்ப்பு பெரும்பாலும் இல்லை என்பதுதான் நிலைமை.

இந்தப் பின்புலத்தில் தொடர்ந்து மொட்டுக் கட்சியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு நின்றால் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அதிகாரமும் இன்றி, பதவியும் இல்லாமல் இருக்க வேண்டியதுதான் என்று மொட்டுக் கட்சி எம்.பிக்கள் பலரும் கருதுகின்றனர்.

வெற்றிக்கு வாய்ப்புள்ள மூன்று வேட்பாளர்களில் இருவரான சஜித்துடன் அல்லது அநுர குமார திஸநாயக்கவுடன் தாங்கள் சேர்வதற்கும், சேர்ந்தாலும் அவர்கள் தேர்தல் வெற்றியின் பின் தங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கும் இடமில்லை என்பது மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு நன்கு தெரியும். புரியும்.

இந்தச் சூழலில் வெற்றிக்கு வாய்ப்புள்ள இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனாவது அணி சேர்ந்து நிற்பதுதான் எதிர்காலத்திலும் அதிகாரத்திலும் பதவியிலும் நீடிப்பதற்கு தங்களுக்குள்ள ஒரே வழி - மார்க்கம் - என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அதன் பிரதிபலிப்பைத்தான் அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் உரையின் ஊடாக உணர முடிகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளர் ஒருவரை இறக்கும் களநிலையில் தமது கட்சி இல்லவே இல்லை என்ற யதார்த்தத்தை மொட்டுக்கட்சியும் உணர்ந்து கொண்டிருப்பதால், தனது எம்.பிக்களைத் தொடர்ந்து கட்சியின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும் அக்கட்சி நெருக்கடியை எதிர்கொள்கின்றது. இது தவிர்க்க முடியாத இக்கட்டுத்தான்.

வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிக்கான வாய்ப்பு உள்ள வேட்பாளர்களைக் கொண்டிராத தென்னிலங்கைக் கட்சிகள், அணிகள், தரப்புகள் எல்லாவற்றிலும் இத்தகைய அரசியல் குழப்பங்கள் உண்டு.

ஏனென்றால், எல்லாக் கட்சிகளிலும் இருக்கும் அரசியல் வெளவ்வால்களும் எப்போதும் அதிகாரப் பழங்களைத் தேடி - நாடி - மட்டுமே ஓடும் என்பதே இங்குள்ள பொதுவான வழக்கம் என்பதுதான்.



# சம்பந்தன் ஐயாவின் இழப்பு அதிர்ச்சி அளிக்கிறது!



## குகதாசன் இரங்கல் தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் கடந்த அரை நூற்றாண்டாகத் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நின்றவரும் இலங்கைத் தமிழர் இனச் சிக்கலுக்கு தீர்வுக்கான அயராது உழைத்து வந்தவருமான மாண்புமிகு இரா. சம்பந்தன் ஐயா இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் சார்பில் மாவட்டத் தலைவர் க.ச. குகதாசன் தெரிவித்துள்ளார்.

ஐயாவின் பிரிவால் வாடும் அவரது மனைவி, மக்கள், மருமகள், பேரன் உள்ளிட்ட உற்றார், உறவினர் அனைவருக்கும் இரங்கலையும் துயர் பகிர்வினையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆத்ம சிவப்பிராப்திக்கு பிரார்த்தனை செய்கிறோம்!

## இந்துக் குருமார் அமைப்பு இரங்கல்

எமது தமிழினம் ஓர் பெரும் பலத்தை இழந்த சூழலில் உள்ளது. சுமார் ஆறு தசாப்தங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய ஆற்றல்மிகு சக்தியாக தமிழ் மக்கள் மத்தியில் விளங்கிய ஓர் பண்புமிக்க அறிவாளனை இழந்துள்ளோம்.

இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் ஆகியோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராஜதந்திர நகர்வுகளை செய்யும் சிறப்பாளர். பல்வேறு நாட்டு தலைவர்களாலும் இராஜதந்திரிகளாலும் மதிக்கப்பட்டவர். எமது தமிழ் பிரதிநிதிகளை ஓர் அணியாகத் திரட்டிச் செயற்பட்டவர். இவ்வாறு நிதானமாக நுண்ணறிவுடன் செயலாற்றிய, தலைமை தாங்கிய தலைவரை இழந்துள்ளோம்.

இந்தச் சமயத்தில் அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் இறை பிரார்த்தனை செய்கிறோம்.– என்றுள்ளது.

# தமிழ் சமூகத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தவர் சம்பந்தன் ஐயா!

## கனேடியத் தமிழர் பேரவை ஆழ்ந்த இரங்கல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தனின் மறைவுக்குக் கனேடியத் தமிழர் பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பேரவை விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
“Voice of Tamil Canadians”

தமிழ் சமூகத்துக்காக மட்டும் அல்லாது இலங்கையின் அனைத்து மக்களுக்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த இரா. சம்பந்தன் ஐயா, தனது மக்களின் உரிமைக்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் போராடினார்.

சம்பந்தன் ஐயாவின் பங்களிப்புகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை. அவர் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகவும், பலருக்கு உத்வேகமாகவும் இருந்தார். தமிழர் நலனுக்கான அவரது தளராத அர்ப்பணிப்பும் பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதற்கான அவரது முயற்சிகள் இலங்கையின் வரலாற்றில் அழியாத தடம் பதித்துள்ளன.

2016 ஆம் ஆண்டில், கனடியத் தமிழர் பேரவை சம்பந்தன் ஐயாவுக்கு வாழும் நாயகன் விருதை வழங்கியிருந்தது. அவரது முன்மாதிரியான தலைமைத்துவம், தைரியம், மற்றும் சவாலான சூழ்நிலைகளில் சேவை செய்ததைப் பாராட்டி இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பதையும் இந்த நேரத்தில் நினைவு கூருகின்றோம்.

இரா.சம்பந்தன் ஐயாவின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரை இழந்து வாடும் அனைவருக்கும் கனேடியத் தமிழர் பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த இக்கட்டான நேரத்தில் உங்களின் துக்கத்தில் நாங்களும் பங்கு கொள்கிறோம். எதிர்காலச் சந்ததியினரை அமைதி, நீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளை பின்பற்ற அவரது மரபு தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும்.

இரா.சம்பந்தன் ஐயாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். உங்களின் அயராத சேவையும், நிலையான பாரம்பரியமும் என்றென்றும் நினைவு கூரப்படும்.– என்றுள்ளது.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளி. அலுவலகத்தில் அஞ்சலி!




மறைந்த, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் இன்று இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இன்று காலை நடைபெற்றன.

துயரின் வெளிப்பாடாக மாவட்டப் பணிமனை முன்றலில் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு சம்பந்தன் ஐயாவின் இழப்பு பேரிழப்பு!

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. அஞ்சலியில் தெரிவிப்பு



தமிழ்த் தேசியப் பரப்பின் மூத்த அரசியல், சட்ட ஆளுமை தமிழ்த் தேசத்தில் இருந்து தன்னை நிரந்தரமாக விடுவித்துக் கொண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடைய மறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தனது இரங்கலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஐயா தனது 91 ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

அன்னாரின் இழப்பு தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும். தனது சட்டத் தொழிலை தியாகம் செய்து தன்னை மக்கள் அரசியலில் ஈடுபடுத்திய பெருமகனார் அவர்.

தமிழர்களின் மூன்று வகையான போராட்ட காலங்களிலும் தனது அரசியல் சாணக்கியத்தையும், அனுபவத்தையும் பல சந்தர்ப்பங்களில் இராஜதந்திரங்களாக அவர் பயன்படுத்தியிருந்ததை இந்தத் தருணத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் பிரதிநிதித்துவத்தின் இறுதி நம்பிக்கையாக திகழ்ந்த அவரது இழப்பு ஈடுசெய்யப்பட முடியாதது.

வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க கட்சியையும், வேறுபட்ட நீரோட்டங்களில் பயணித்த கட்சிகளின் கூட்டமைப்பையும் தனது இயலுமைக் காலங்கள் அனைத்திலும் தன் ஆளுமையால் சிதைவடையாது காப்பாற்றியதில் அவருக்கு இணை அவர் மட்டுமே.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றின் நீண்டகால அனுபவப் பக்கம் ஒன்றை எங்கள் இனம் இழந்துள்ளது.

அன்னாரின் இழப்பால் துயரடைந்துள்ள குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், அரசியல் கட்சியினர், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.- என்றுள்ளது.

# சம்பந்தன் ஐயாவின் இழப்பு பேரிழப்பாகும்!

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. இரங்கல்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் இலங்கையின் மூத்த அரசியல்வாதியுமான நாடாளுமன்ற உறுப்பினர் இரா .சம்பந்தன் ஐயாவின் இழப்பு எம் நாட்டு அரசியலுக்கு பேரிழப்பாகும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவை அடுத்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அன்னாரின் இழப்பால் துயறுரும் குடும்பத்தினர் மற்றும் நலன் விரும்பிகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சம்பந்தன் ஐயாவின் மறைவு கவலை அளிக்கிறது!

## வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் இரங்கல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க் கட்சித் தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், சட்டத்தரணியுமாகிய திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைகின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி அறிந்து ஆளுநர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக காலஞ்சென்ற இரா. சம்பந்தன் காணப்படுகின்றார்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மைக் கருதி அன்னார் செயற்பட்டார் என்றால் மிகையாகாது.

இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துகொண்டிருந்த குரல் இன்று மௌனித்துள்ளது. காலம் சென்ற திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றேன்.

அன்னாரின் பிரிவால் மீளாத் துயரில் வாடும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்றுள்ளது.

# தமிழ் பேசும் மக்களின் தலைமகனின் இழப்பு பேரிழப்பாகும்!

## ஹரீஸ் எம்.பி. இரங்கல் செய்தியில் தெரிவிப்பு

இலங்கை அரசியலில் இருந்த மூத்த சிறுபான்மை தலைவர் இரா. சம்பந்தன் ஐயா காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தேன். தமிழ் மக்களின் ஆணி வேராக நோக்கப்படும் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் சட்டத்தரணி இரா. சம்பந்தன் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானதாக அறிந்து மிகவும் கவலை அடைந்தேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது அனுதாப செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான சம்பந்தன் ஐயா கடந்த 2015 செப்ரெம்பர் 3 முதல் 2018 டிசெம்பர் 18 வரை இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்து, தமிழர்களின் உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியாக போராடிய மூத்த தலைவராக நோக்கப்படுகிறார்.

எனது சமூகம் சார்ந்த பிரச்சினைகளின் போதும், சிறுபான்மை மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினைகளின் போதும் அவருடன் நேருக்கு நேராகவும், தோளோடு தோளாகவும் நின்ற நாள்கள் ஏராளம்.

தன்னை சார்ந்த இனத்தின் உரிமைகளுக்காக விட்டுக்கொடுப்புக்களோ அல்லது தளர்வுகளோ இல்லாது போராடிய தலைமையை இன்று தமிழ் மக்கள் இழந்திருக்கிறார்கள் என்பதை விட அனுபவமும், ஆற்றலும் கொண்ட சிரேஷ்ட அரசியல் ஆளுமையை இலங்கை தேசம் இழந்திருக்கிறது என்பதே உண்மை.



சம்பந்தன் ஐயா அவர்களின் நல்ல குணவியல்வுகளை பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் சிலாகித்து பேசிய போது நாங்கள் கேட்டிருக்கிறோம். பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் மதித்த ஒரு தலைவராக சம்பந்தன் ஐயா அவர்கள் திகழ்கிறார்கள்.

நான் கல்முனை மாநகர முதல்வராக 2010 காலப் பகுதியில் இருந்த போது சம்பந்தன் ஐயாவுக்குப் பெரியளவிலான வரவேற்பொன்றை அளித்து ஆயிரக்கணக்கான கல்முனை மக்கள் முன்னிலையில் தமிழ் பேசும் மக்களின் தலைமகன் ஏற்ற விருதை வழங்கி கௌரவித்த பொழுதுகளை இந்த சந்தர்ப்பத்தில் நினைத்து பார்க்கிறேன்.

தம்பி ஹரிஸ், சிறுபான்மை சமூகமான நாங்கள் பிரிந்துவிடக்கூடாது என நாடாளுமன்றத்தில் அடிக்கடி என்னிடம் கூறிவந்த அவர், சிறுபான்மை சமூகம் ஒன்றிணைந்து தான் அதிகாரப் பகிர்வு, முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அதிகாரம், உரிமைகளை பரஸ்பரமாக விட்டுக்கொடுப்புடன் வெல்ல வேண்டும் என்ற கருத்தை அடிக்கடி கூறிவந்தார்.

முஸ்லிங்களின் அபிலாசைகளையும், சிங்கள மக்களின் உணர்வுகளையும் மதித்த ஒரு தமிழ் தலைமை சம்பந்தன் ஐயா. இவரின் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது.

சர்வதேச அங்கீகாரத்தை பெற்ற சிரேஷ்ட அரசியல் தலைமையான அவரின் காலத்திலையே இனப் பிரச்சினைக்குத் தீர்வு வருமென்று நாங்கள் நம்பியிருந்தோம். இவரின் இழப்பால் தீர்வு சம்பந்தமான இலக்கை எவ்வாறு அடைய முடியும் என்ற கேள்வி எழுகிறது. இருந்தாலும் தான் சார்ந்த தமிழ்ச் சமூகத்துக்கு அவர் செய்த சேவைகள், பங்களிப்புக்கள் வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாக மாறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அவரது இழப்பால் துயருற்ற அவரது குடும்பத்தினர், ஆதரவாளர்கள், நண்பர்கள், இலங்கை தமிழரசு கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் எல்லோருக்கும் எனது அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவித்து கொள்கிறேன். - என்றுள்ளது.

# சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்தி மிகவும் ஆழ்ந்த கவலையை தருகிறது!

## ஹிஸ்புல்லா இரங்கல் செய்தியில் தெரிவிப்பு

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன் ஐயாவின் மரணச் செய்தி கேட்டு மிகவும் ஆழ்ந்த கவலை அடைகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

குறிப்பாக சம்பந்தன் ஐயா 1989ஆம் ஆண்டு தொடக்கம் என்னோடு பாராளுமன்றத்தில் இருந்த ஒருவர் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு மட்டத்தில் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுத் தந்தவர்.

அத்துடன் மூதூரில் விடுதலை புலிகள் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய போது அது தொடர்பில் இரண்டு மூன்று நாள்கள் அவரோடு தொடர்ச்சியாக கலந்துரையாடினோம்.

அவர் மிகவும் நீதியாகவும், நியாயமாக நடந்து கொள்கின்ற ஒருவர். நான் கிழக்கு மாகாணத்தில் அமைச்சராக, ஆளுநராக இருந்த காலப் பகுதியில் என்னுடைய முன்னெடுப்புகளுக்கு முழு ஆதரவையும் வழங்கிய ஒருவர்.

நான் எப்பொழுதும் மரியாதையோடும் கண்ணியமாகவும் பார்க்கின்ற ஒரு தலைவர்.

தமிழ் சமூகத்தின் வடகிழக்கு பிரச்சினை தீர்வின்போது முஸ்லிம் சமூகத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் மும்முரமாக இருந்த ஒருவர்.

தான் வயது முதிர்ந்த காலத்திலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் துணிச்சலாகவும் 13 ஆவது சட்ட திருத்த விடயத்தில் மிகவும் காரமாக நடந்து கொண்ட மிகப்பெரிய ஒரு தலைவர்.

என்றும் சிறுபான்மை சமூகத்துக்காக இப்பொழுதும் குரல் கொடுக்கும் ஒரு பெரும் தலைமைத்துவத்தை நாம் இன்று இழந்து இருக்கிறோம்.

அவருடைய இழப்பால் துயருற்றிருக்கும் கட்சிக்கும் அவருடைய குடும்பத்துக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.– என்றுள்ளது.







# நிறுத்திவைக்கப்பட்ட பஸ்கள் மீது தாக்குதல்; தலவாக்கலை – நுவரெலியா சேவை நிறுத்தம்!

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்துத் தலவாக்கலை – நுவரெலியா பிரதான வீதியில் சேவையில் ஈடுபட்டுவந்த அனைத்து தனியார் பஸ்களும் இன்று (01) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

லிந்துலை பிரதேசத்தில் நேற்று (30) இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு தனியார் பஸ்களைச் சில நபர்கள் அல்லது குழுவினர் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர் என்று கூறி தனியார் பஸ் உரிமையாளர்கள் இந்தப் பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் தலவாக்கலை – நுவரெலியா மார்க்கத்தில் பயணிக்கும் அனைத்து தனியார் பஸ்களும் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன என்று மத்திய மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலவாக்கலை நிலைய பொறுப்பதிகாரி தசந்தருவன் அபேவிக்ரம தெரிவித்தார்.

இரண்டு பஸ்களின் முன்பக்க கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன என்றும்சிலபஸ்களின்முன்பக்கவிளக்குகள் உடைக்கப்பட்டுள்ளன என்றும் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பஸ்கள் நிறுத்தப்பட்ட இடத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராக்களை பரிசோதித்து சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை – நுவரெலியா பிரதான வீதியில் பயணிக்கும் தனியார் பஸ்களின் வேலை நிறுத்தம் காரணமாகப் பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் ஏனைய பயணிகள் கடும் சிரமங்களையும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.






# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச நீதி கோரி யாழில் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி கோரி, யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினரால் இன்று காலை 10 மணியளவில் யாழ். மாவட்ட செயலகம் முன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஓ.எம்.பி. அலுவலகம் வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இழப்பீடு வேண்டாம், நீதியே வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.























# 25 மீனவர்கள் இன்று கைதானமையை ஆட்சேபித்து பாம்பனில் ஆர்ப்பாட்டம்

## ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து ஸ்தம்பிதம்

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் இலங்கை கடற்படை இன்று காலை கைதுசெய்துள்ளமையைக் கண்டித்து பாம்பன் மீனவர்கள் இன்று திங்கட்கிழமை காலை கடலில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

மேலும், மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய கோரி பாம்பன் சாலை பாலத்தில் மீனவர்கள் நடத்திய சாலை மறியல் போராட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

பாம்பன் வடக்கு மீன்பிடி துறை முகத்தில் இருந்து 50 க்கும் மேற்பட்ட நாட்டு பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

நாட்டுப் படகு மீனவர்கள் இன்று அதிகாலை இலங்கை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த இலங்கை கடற்படையினர் 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்து இருதயராஜ், கிரேசியான், லயோனஸ் உள்ளிட்ட 25 மீனவர்களையும் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

இந்நிலையில் பாம்பன் பகுதி நாட்டுப் படகு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தமையைக் கண்டித்து மீனவர்களின் உறவினர்கள் மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் மீனவர்கள் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியமையுடப், மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி பாம்பன் சாலை பாலத்தின் முகப்பு பகுதியில் அமர்ந்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

மீனவர்களின் இந்த சாலை மறியலால் மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மீனவர்கள் தங்களது போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்தனர். மீனவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் மீனவர்கள் போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என மீனவரின் உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர்.











# லெபனானில் இருந்து தனது குடிமக்களை வெளியேறக் கோருகிறது சவுதி அரேபியா

**பெய்ரூட், ஜூலை 01**

லெபனானில் போர்ப் பதற்றம் நிலவு வதால் அங்கு வசிக்கும் தனது நாட்டின் குடிமக்கள் அனைவரையும் உடனடி யாக அங்கிருந்து வெளியேறும்படி சவுதி அரேபியா அறிவுறுத்தி உள்ளது.

இஸ்ரேலின் வடக்கு பகுதிகளை ஆக்கிரமிக்க போவதாகவும் ஹிஸ் புல்லா கிளர்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இஸ்ரேல்-காசா போர் கடந்த 8 மாதங் களுக்கும் மேலாக தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இதில் காசாவுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ் புல்லா கிளர்ச்சியாளர்கள் செயல்படு கின்றனர். இவர்கள் இஸ்ரேல் எல் லைப்பகுதிகளில் அடிக்கடி தாக்குத லில் ஈடுபடுகின்றனர். மேலும் இஸ்ரே லின் வடக்கு பகுதிகளை ஆக்கிர மிக்க போவதாகவும் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே லெபனானில் உள்ள ஹிஸ் புல்லா கிளர்ச்சியாளர்களையும் முழுமை யாக ஒழிக்க இஸ்ரேல் உறுதிபூண் டுள்ளது. இதனால் அங்கு போர்ப் பதற்றம் நிலவுகிறது. எனவே லெபனா னில் வசிக்கும் தனது நாட்டின் குடி மக்கள் அனைவரும் உடனடியாக வெளியேறும்படி சவுதி அரேபியா அறிவுறுத்தி உள்ளது.

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!

## கொரிய தீபகற்பத்தில் பதற்றம்

**சியோல், ஜூலை 01**

வடகொரியா மீண்டும் ஏவுக ணைச் சோதனை நடத்தியது.

அணு ஆயுதங்களை தாங்கிச் செல் லும் – கண்டம் விட்டு கண்டம் பாயும் – ஏவு கணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா – தென்கொரியா இடையே பல ஆண்டு களாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாகக் கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது. மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச் சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்து வோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இதனிடையே, அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா இணைந்து கடந்த சில நாள்களுக்குமுன் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டன. இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சிக்கு வடகொரியா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.



இந்நிலையில், வடகொரியா இன்று ஏவுகணை சோதனை நடத்தியுள் ளது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப் பான் இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி நிறைவடைந்த நிலையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. வடகொரியாவின் ஜங்யாங் நகரில் இருந்து வடகிழக்கு திசையை நோக்கி 10 நிமிட இடை வெளியில் 2 ஏவுகணைகள் ஏவப் பட்டன. முதல் ஏவுகணை கடலில் விழுந்ததாகவும், இரண்டாவது ஏவு கணை வடகொரிய நிலப்பரப்பிற்குள் ளேயே விழுந்ததாகவும் தென்கொரிய ராணுவம் தெரிவித்துள்ளது.

வடகொரியா கடந்த 26 ஆம் திகதி ஏவுகணை சோதனை நடத்திய நிலை யில் 10 நாள்களுக்குள் 2 ஆவது முறையாக மீண்டும் ஏவுகணை சோதனை நடத்திய சம்பவம் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது.

கனடா முரசு

திங்கட்கிழமை 01/07/2024

## கியூபெக் விபத்துகளில் இரண்டு பேர் உயிரிழப்பு

ஞாயிற்றுக்கிழமை கியூபெக்கில் நடந்த இருவேறு விபத்துக்களில் ஓட்டுநரும் பாதசாரியும் உயிரிழந்தனர்.

முதல் விபத்தில், டர்கோட் இன்டர்சேஞ்சில் காலை C2





# இன்று கனடா தினத்தை ஒட்டி நாடு எங்கும் கொண்டாட்டம்!

**கனடா நாட்டின் செழுமை, பன்முகத் தன்மை, கலாசாரம், பங்களிப்புகள், அனைத்திற்கும் மேலாக கனடா மக்களின் வளம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் கனடா தினம் இன்று ஜூலை முதலாம் திகதி கனடா நாடு எங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.**

**1868 ஆம் ஆண்டு முதல், ஜூலை 1 என்பது அனைத்து சமூகங்களைச் சேர்ந்த கனடியர்களும் ஒன்றிணைவதற்கான நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.**

பார்ட்டிகள், பட்டாசுகள், வாண வேடிக்கைகள், அணிவகுப்புகள், களியாட்ட நிகழ்வுகள், இசைக் கச்சேரிகள், விளையாட்டுப் போட்டிகள், சுற்றுலாக் கொண்டாட்டங்கள் என்று மாகாணங்கள் முழுவதிலும் உள்ள மாநகரங்க, நகரங்கள் மற்றும் பட்டினங்கள் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

அனைத்து வயதினருக்கும் பலவிதமான உற்சாகமான பொழுதுபோக்குகள் இடம்பெறுகின்றன.

1867 ஆம் ஆண்டில் மூன்று பிரதேசங்களை ஒற்றை நாடான கனடாவாக ஒருங்கிணைத்த அரசமைப்புச் சட்டத்தின் ஆண்டு நிறைவை இந்த நாள் நினைவுகூருகிறது.

கனடா தினம் ஒரு பொது விடுமுறை. பொது மக்களுக்கு இது ஒரு நாள் விடுமுறை. மேலும் பள்ளிகள் மற்றும் பெரும்பாலான வணிகங்கள் மூடப்பட்டுள்ளன.

பல நகரங்கள் மற்றும் மாநகரங்களில், முனிசிபல் அரசாங்கங்கள் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன. அவை பெரும்பாலும் வெளிப்புறங்களில் - திறந்த வெளி அரங்குகளில் - நடக்கின்றன.




இக்கொண்டாட்டங்கள் பெரும்பாலும் தேசபக்தி மனநிலையைக் கொண்டிருப்பது அவதானிக்கத்தக்கது. கனடாவின் தேசியக் கொடி பரவலாகக் காட்டப்பட்டுள்ளது. நிறைய பேர் தங்கள் முகங்களை சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் வரைகிறார்கள். இது கனடாவின் தேசிய நிறமாகும்.

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் கொண்டாட்டங்கள் மிக உற்சாகமாக உள்ளன.



# அமைதியான இலங்கையைக் காண்பதற்கு கனடா விரும்புகின்றது என்கிறார் தூதுவர்



கனடா, அமைதியான வளமான மற்றும் நல்லிணக்கமான இலங்கையை காண விரும்புகிறது என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் ( Eric Walsh) தெரிவித்துள்ளார்.

இன்று ஜூலை 1, கொண்டாடப்படும் கனடா தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கனடாவின் சர்வதேச உதவியானது பெண்கள் மற்றும் சிறுமிகளை மேம்படுத்துவதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய காலநிலைக்கு ஏற்ற வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மற்றும் மோதலுக்குப் பின்னரான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்குமான, இலங்கையின் முயற்சிகளுக்கு வழங்கப்படுகிறது என்று எரிக் வோல்ஷ் கூறியுள்ளார்.

முழுமையான பொருளாதார மீட்சியை முன்னெடுத்துச் செல்லும் இலங்கையுடன் கனடா தொடர்ந்து நிற்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

கனடா கூட்டமைப்பின் 157ஆவது ஆண்டு நிறைவை, பிரமிக்க வைக்கும் புவியியல் அம்சங்கள் மற்றும் ஏராளமான இயற்கை வளங்களைக் கொண்ட நாட்டில் கொண்டாடுகிறோம்.

அங்கு சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் அனைத்து தனிநபர்களுக்கும் மரியாதை ஆகியவை ஆழமாக மதிக்கப்படுகின்றன.

மேலும் கனடா, ஒரு நீண்ட ஜனநாயக பாரம்பரியம், இரண்டு உத்தியோகபூர்வ மொழிகள், வளமான பன்முக கலாசார சமூகம், பழங்குடி மக்களுடன் நல்லிணக்கத்திற்கான அர்ப்பணிப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இதுவே, உலகெங்கிலும் உள்ள மக்களை கனடாவிற்கு ஈர்க்கும் ஒரு பெரிய பகுதியாகும் என்றும் கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு வாக்கைக் கூடப் பெறாத கனடிய வேட்பாளரின் சாதனை



தேர்தலில் போட்டியிட்ட கனடிய வேட்பாளர் ஒருவர் வித்தியாசமான வராற்றுச் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு பூச்சிய வாக்குகளைப் பெற்றுக்கொண்டு அவர் வரலாறு படைத்துள்ளார்.

பீலிக்ஸ் அன்டனி ஹமோல் என்ற நபரே இவ்வாறு தேர்தலில் போட்டியிட்டு வாக்கு எதனையும் பெற்றுக் கொள்ளத் தவறியுள்ளார்.

கடந்த வாரம் ரொறன்ரோவின் தொகுதியொன்றில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஹமோல் போட்டியிட்டிருந்தார்.

தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி மட்டும் அந்தத் தேர்தலில் சுமார் 75 வேட்பாளர்கள் வேண்டுமென்றே களம் இறங்கினர். அதனால் சுமார் மூன்றடி நீளமும் ஓர் அடி அகலமும் கொண்ட வாக்குச்சீட்டுப் பயன்பசுத்தப்பட்டது

இந்த தேர்தலில் மொத்தமாக 84 பேர் போட்டியிட்டனர். அவர்களில் ஹமோல் ஒரு வாக்குக் கூட பெற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2015ம் ஆண்டு தேர்தலில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோளித்த தேர்தல் முறைமை திருத்தம் குறித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## கியூபெக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 மணியளவில் பல வாகனங்கள் மோதின. பாதை 136 கிழக்கு நோக்கி செல்லும் நெடுஞ்சாலை 15 ஆவது வளைவில் நடந்த இந்த விபத்தில் ஒரு சாரதி கொல்லப்பட்டார் மற்றும் வயது குறைந்த பயணி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பாதிக்கப்பட்டவரின் உயிருக்கு ஆபத்து இல்லை.

புரொஸ்கார்ட் என்ற இடத்தில், காலை 6:30 மணியளவில் வாகனம் மோதியதில், 75 வயது பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

21 வயதான ஓட்டுநர் தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்தமையால் பைக் பாதையில் நடந்து கொண்டிருந்த ஒரு நபரை அவரது வாகனம் மோதிக் கொன்று விட்டது எனக் கூறப்பட்டது.

சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். ஆபத்தான வாகனம் செலுத்தி மரணத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டை அவர் எதிர்கொள்ள நேரிடும் என பொலிஸார் தெரிவித்தனர்.




# ஹமில்டன் விருந்து நிகழ்வில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் சாவு

## ஹமில்டன் பகுதியில் நேற்று அதிகாலை சம்பவம்

கனடாவின் ஹமில்டன் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணி அளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில்ஒருவர்கொல்லப்பட்டுள்ளார்.

ஹமில்டனில் தற்காலிக வாடகை ஆதனம் ஒன்றில் நடைபெற்ற விருந்து ஒன்றில் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் காயமடைந்தனர் எனவும் அவ்வாறு காயமடைந்தவர்களில் ஒருவரே கொல்லப்பட்டார் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

சூட்டில் மற்றொரு பெண் காயமடைந்தார். ஆனால் அவருக்கு உயிராபத்தான காயம் ஏதும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்றாவது பெண் கைகளினால் தாக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

காயமடைந்து தப்பிச் சென்றவர்களில் ஒருவரே வழியில் நெடுஞ் சாலையில் காருக்குள் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவர் இருபதுகளின் நடுப் பகுதி வயது கொண்டவர் எனக் கூறப்பட்டது.

இந்த விருந்துபசாரத்தில் சுமார் 40க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளன எனத் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வாடகை தொகை அதிகரிப்பு ஒன்றாரியோவில் 2.5 வீதமாம்

ஒன்றாரியோ வாடகை தொகை அதிகரிப்பு குறித்து அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

மாகாணத்தில் வருடாந்த வாடகைத் தொகை அதிகரிப்பு உச்ச வரம்பு 2.5 வீத மாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாகாண அரசாங்கம் இது தொடர்பிலான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நாட்டில் பணவீக்கம் 3.1 வீதமாக காணப்படும் நிலையில், ஒன்றாரியோ மாகாணத்தின் வாடகைத் தொகை அதிகரிப்பு உச்ச வரம்பு 2.5 வீதமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அடுத்த ஆண்டுக்கான வாடகைத் தொகை அதிகரிப்பு குறித்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் அனைத்து மாகாணங்களை விடவும் ஒன்றாரியோவில் வாடகைத் தொகை குறைவாக காணப்படுகின்றது.

கொவிட் பெருந்தொற்று காலப் பகுதியில் வாடகைத் தொகை அதிகரிப்பு இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.









# வெஸ்ட்ஜெட் விமான சேவை வேலைநிறுத்தத்தால் 110,000 பேரின் பயணத் திட்டங்கள் குழப்பத்தில்!

கனடா தின நிகழ்வுகள் கட்டவிழ இருந்த சமயத்தில் வெஸ்ட்ஜெட் விமான பொறியியலாளர்கள், மெக்கானிக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரென ஆரம்பித்த வேலைநிறுத்தம் பல நூறு விமான சேவைகளைக் கடைசி நேரத்தில் ரத்துச் செய்ய வைத்து, கனடா நாள் நீண்ட வார இறுதியில் சுமார் 110,000 பயணிகளின் பயணத் திட்டங்களை மண்ணாக்கியுள்ளது.

விமானங்களில் தினசரி ஆய்வுகள் மற்றும் பழுது பார்ப்புக்களை மேற்கொள்ளும் விமான மெக்கானிக்குகளான ஏறக்குறைய 680 தொழிலாளர்கள் தமது பணிகளை தொழிற்சங்கப் போராட்டமாக திடீரென நிறுத்தியமை லட்சத்துக்கும் அதிகமான கனடா நாள் விமுறைக் கொண்டாட்டக்காரர்களின் திட்டங்களைப் பாழ்படுத்தி விட்டது.

இந்த வேலை இறுத்தத்தால் வியாழன் முதல் இதுவரை 829 விமான சேவைகளளை நிறுவனம் ரத்து செய்துள்ளத. எனக் கூறப்படுகின்றது.









# இணையத்தின் ஊடாக விடுதிகள் பதிவு செய்யும் போது மோசடிகள்!

கனடாவில் இடம்பெற்று வரும் மோசடி சம்பவம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடா தின கொண்டாட்டங்கள் இன்று முதல் நடைபெறவுள்ள நிலையில் பலரும் சுற்றுலா விடுதிகளில் விடுமுறையை கழிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இணையத்தின் ஊடாக விடுதிகள் பதிவு செய்யும் போது பல்வேறு மோசடிகள் இடம்பெறுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் விடுதிகளை வாடகைக்கு விடுவதாகக் கூறி விளம்பரம் செய்து இவ்வாறு மோசடிகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்றாரியோவைச் சேர்ந்த பெண் ஒருவர் முகநூல் விளம்பரம் ஒன்றின்



அடிப்படையில் விடுதி ஒன்றை முன் பதிவு செய்த போது ஏமாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பெண்ணிடம் ஆயிரம் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது.

முற்பணமாக வைப்புச் செய்யப்பட்ட ஆயிரம் டொலர் பணத்தைத் தான் இழந்து விட்டார் என ஒன்றாரியோவைச் சேர்ந்த ஹோமா அஷ்ராபோஃர் தெரிவித்துள்ளார்.

# தங்கள் தாயகம், பூர்வீகம் குறித்து கனடியர்களுக்குப் பெருமிதம்தான்

## ஆயினும் தேசியப் பெருமை இப்போது குறைந்து விட்டதாம்




பெரும்பாலான கனேடியர்கள் தங்கள் தாயகம் மற்றும் பூர்வீக நிலத்தைப் பற்றி பெருமிதம் கொள்கின்றனர். ஆயினும் அவர்கள் கருத்தில் நமது தேசிய பெருமை சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட குறைவாக உள்ளது.

ஒரு புதிய கருத்துக்கணிப்பு இந்த விவரங்களைத் தெரிவிக்கிறது.

கனடா தினத்தை முன்னிட்டு கனேடியராக இருப்பதைப் பற்றி அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்று

வாக்கெடுப்பு நிறுவனமான லெகர் கடந்த வார இறுதியில் 1,607 பேரிடம் ஆய்வு செய்து, கேள்வி எழுப்பியது.

ஜூலை நான்காம் திகதி அமெரிக்க சுதந்திர தினத்தை ஒட்டி முன்னதாக 1,003 அமெரிக்கர்கள் கொண்ட குழுவிடமும் நிறுவனம் இதே போன்ற கேள்விகளை எழுப்பியது.

கனடா மக்களில் பெரும்பான்மையானவர்கள் - 76 சதவீதம் பேர் - தங்களைப் பெருமைமிக்க கனடியர்கள் என்று அழைக்கின்றனர் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஆனால், 2019 ஆம் ஆண்டில் - ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு - நாட்டின் தேசியப் பெருமை தொடர்பில் தங்களுக்கு இருந்த கௌரவம் இப்போது குறைந்து விட்டதாகத் தாங்கள் உணர்கின்றனர் என 45 சதவீதம் பேர் கூறியுள்ளனர்.

ஆயினும் 2021ஆம் ஆண்டில் இந்தக் கேள்வியை மக்களிடம் தாங்கள் எழுப்பிய போது இருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது 16 சதவீத புள்ளிகள் மேம்பட்டது என லெகர் ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டது.

கனேடியராக இருப்பதில் தங்களை மிகவும் பெருமைப்படுத்தும் விஷயங்களின் பட்டியலிலிருந்து தேர்வு செய்யும்படி பதிலளித்தவர்கள் கேட்கப்பட்டனர். நாட்டின் இயற்கை அழகு பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் சமத்துவம், அமைதியான மற்றும் பாதுகாப்பான சமூகம் மற்றும் பன்முக கலாச்சாரம் என்பன வரிசைப் படுத்தப்பட்ட பதில்களாக அமைந்தன.

ஐந்தில் ஒருவர் மட்டுமே தங்களுடைய சக கனடியர்கள் தங்களுக்கு நாட்டின் பெருமையை உணர வைத்தனர் எனக் கூறினர்.

நீண்ட காத்திருப்பு பட்டியல்கள், குடும்ப மருத்துவர்களின் பற்றாக்குறை மற்றும் அதிக நெருக்கடியுடன் கூடிய அவசர சிகிச்சை அறைகள் ஆகியவை சமீபத்திய ஆண்டுகளில் நாடு முழுவதும் தலைப்புச் செய்திகளை உருவாக்கியுள்ளன.

சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பின் நிலை, பதிலளித்தவர்களுக்கான கவலைகளின் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது. பொருளாதார சமத்துவமின்மை மற்றும் வறுமை அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. இது மக்கள் கனடியராக இருப்பதில் குறைந்த பெருமையை உணர வைத்தது.

சமஷ்டி அரசின் தற்போதைய நிலமை மூன்றாவது சிரத்தைக்குரிய விடயமாக அவர்களுக்கு அமைந்துள்ளது.



# சீனத் தயாரிப்பு மின்சார வாகனங்களுக்கு மேலதிகக் கட்டணம் கனடா விதிக்கும்?

கனடாவின் வாகனச் சந்தையில் சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்கள் மலிவாக - வெள்ளப் பெருக்காக - ஆக்கிரமிப்பதைத் தடுப்பதற்காக சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்கள் மீதான கட்டணங்களை அதிகரிக்கலாமா என்று கனடா இப்போது எடைபோடுகிறது.

கனேடிய மின்சார வாகன தொழிற்துறைக்கு பில்லியன் கணக்கான டொலர்கள் மதிப்புள்ள மானியங்களை வழங்கியுள்ள ஒட்டாவா அரசு இவ்விடயத்தில் அதன் கவலைகள் பொருளாதாரம் மட்டுமல்ல, அதையும் தாண்டியது என்று கூறுகிறது.

"மின்சார வாகனங்கள் போன்ற உயர் தொழில்நுட்ப பொருள்கள் சீனாவிலிருந்து ஏற்றுமதியாகி வரும் போது சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட தேசிய பாதுகாப்பு அம்சத்தையும் நாங்கள் பார்க்கிறோம்" - என்று துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் திங்களன்று கூறினார்.

அமெரிக்காவின் வழியைப் பின்பற்றி சீன மின் வாகனங்களுக்கான கட்டணங்களை 25 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்துவது குறித்து கனடா ஆலோசித்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியமும் இதே போன்ற நடவடிக்கைகளை ஆலோசித்து வருகிறது. ஆனால் சீன அரசாங்கத்துடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்த அது ஒப்புக்கொண்டுள்ளது.